Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 3 | மட்டக்களப்பு | ஆடி – 1971 | விலை 30 | இதழ் 7 |
|---|---|---|---|---|

## உங்கள் கருத்துக்களைத் தெரிவியுங்கள்!

"வளர்ந்துவரும் ''தொண்டனில்'' பல புதிய அம்சங்கள் கண்டு மகிழ்வுறும் வேளையில், எனது சிறிய கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது ''தொண்டனில்'' **வாசகர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க ஒரு பகுதி** இல்லாதது பெருங் குறையாகவே இருக்கிறது. இந்தப் பகுதியினுல் பலருடைய நல்ல கருத்துக்களை அறிந்துகொள்ள முடியும். தவிர, வளரும் எழுத்தாளர்களும் அவரவர் படைப்புகளையிட்டு வாசகர்களின் கருத்தை அறிந்துகொள்ள முடியும. இதனுல் உற்சாகமாகப் பல புதிய புதிய படைப்புகளையும் நாம் பெறமுடியும்.

எனவே தயவுசெய்து வாசகர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய வகையில் ஒரு பகுதியை ஆரம்பிக்கவேண்டுமெனத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.''

இவ்வாறு ஒருவர் எமக்கு அண்மையில் எழுதியுள்ளார். இதைப்போன்று முன்பு பலரும் கேட்டுள்ளபடியால் **'முத்துக்குவியல்'** என்ற புதிய அங்கத்தை ஆரம்பிக்கின்ருேம். வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களைத் தாராளமாகத் தெரிவித்துக்கொள்ளலாம். உங்கள் கருத்துக்கள் உண்மையான முத்துக்களாக இருக்கட்டும். **தெரியாத திருமறை விடயங்களைப்பற்றி கேள்விகள் கேட்டு விளக்கமும் பெற்றுக்கொள்ளலாம்.**

'தொண்டன்' ஆசிரியர்.

<u>நற்செய்திச் சிந்தனைகள்.</u>

## (1) நற்கிரிகை

(லூக். 7, 36–50)

'போதிப்பது இலகு, சாதிப்பது கடினம்'. இன்றைய உலகில் சாதாரணமாக, எங்கும் பரந்து காணப்படுவது இச் சொற்ருெடரே. இன்று மாத்திரமல்ல, அன்றும், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் இச் சொற்ருெடரின் கருத்து நன்கு தெளிவாகியிருந்தது. யூத மக்களுக்குள் கல்வியறிவு, மறையறிவு இரண்டிலும் சிறந்தவர்களாய், அதே வேளையில் அவற்றைத் தமது வாழ்வில் கடைப்பிடியாதவராய் வாழ்ந்தனர் ஒரு பகுதியினர். அவர்கள் தான் பரிசேயர்.

[2ம் பக்கம் பார்க்கவும்]

**''திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நற்கிரிகை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதோ! ஒரு பரிசேயன் மிகவும் அக்களிப்புடன் வந்து கொண்டிருக்கிறுன். இறைமகன் இயேசு இவன் வீட்டில் விருந்துண்ண சம்மதித்ததே இந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

குறிப்பிட்ட நேரத்திற்கு விருந்து ஆரம்பிக்கப்படுகிறது. விருந்து விழா நாயகன் இயேசு இதோ நடுவில் வீற்றிருக்கிருர். ஆனுல் இதென்ன திடீரென எல்லோரின் முகங்களும் சுருங்குகின்றன. பல ஜோடிக் கண்கள் வீட்டின் வாசலை நோக்குகின்றன. வாசலில் ஒரு பெண். அவள் வேறு யாருமில்லை. அங்கு வீற்றிருக்கும் அத்தனை பேராலும், ஏன் அந்த நகரத்து மக்கள் அனைவராலுமே நன்கு அறியப்பட்டவள். பெரும் பாவி என அழைக்கப்பட்டு, அவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டவள். அப்படிப்பட்டவள்,

## "எவ் எஸ். திரும(லை)ருபன்"

இறைமகன் இருக்குமிடம் வந்ததால் அவர்களின் மனம் எல்லாம் குமிறிக் கொண்டிருந்தன.

இவற்றை அறியவோ, அன்றேல் இவற்றைப் பற்றி அக்கறை கொள்ளவோ கவலைப்படாத அந்தப் பெண், நேரே இறைமகனின் அருகில் வருகிருள், குனிந்து கண்ணீரால் அவர் பாதங்களைக் கழுவுகிருள். தன் கருங் கூந்தலால் துடைக்கிருள். கையில் வைத்திருந்த வாசனைத் தைலத்தைப் பூசுகிருள். அங்குள்ளோர் அனைவருக்கும் அதிர்ச்சி! விருந்துக் கழைத்த பரிசேயனுக்கோ படபடப்பு. இவள் யாரென்று யேசு அறியாரா? அறிந்திருப்பின் இவள் தன்னைத் தொட அனுமதித்திருக்கலாமா?'' இதுதான் அவன் எண்ணத்தில் நிறைந்திருந்த அப்போதைய பிரச்சினை.

மனிதப் பலவீனம். இதையறியாமலா இருப்பார் இறைமகன் நகைத்து விட்டு, பரிசேயனுக்கு மாத்திரமின்றி, ஐயங் கொண்ட அனைவருக்குமே கேட்கும்படி கூறுகிருர்.

''ஒரு கதை ஒன்று கூறப் போகிறேன். ஒரு எசமானிடத்தில் இரண்டு பேர் கடன் பட்டிருந்தார்கள். ஒருவன் பெற்ற தொகை ஐந்நூறு தெனியர். மற்றவன் பெற்ற தொகையோ ஐம்பது தெனியர். இருவருக்குமே கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமலிருந்தது. அதனுல் இரக்கம் கொண்ட எசமான் இருவர் கடன்களையும் மன்னித்து விட்டான்'' என்று கூறி நிறுத்தி விட்டு, ''இந்த இருவரில் கடன் கொடுத்தவனை அதிகமாக நேசிப்பவன் யார்?'' என்று கேட்டார்.

அங்கிருந்த சீமோன் ''எவனுக்கு அதிகமாக மன்னிக்கப்பட்டதோ, அவன் தான் அதிகமாக நேசிப்பான் என்று நினைக்கிறேன்'' என்ருன்.

உடனே இறைமகன் ''சரியாகச் சொன்ஞய், சீமோன். இதோ! இந்தப் பெண்ணைப் பார்! நான் உன் வீட்டிற்கு வந்தேன். ஆனுல் என் பாதங்களை கழுவவில்லை. இவளோ, தன் கண்ணீரால் கழுவி கூந்தலால் துடைத்தாள். இதிலிருந்து உனக்கு தெளிவு படுத்துவதாவது, இவள் அதிகமாக நேசிப்பதனுல் இவளிடத்திலுள்ள அதிக பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.'' என்று கூறிவிட்டு, அந்தப் பெண்ணை நோக்கி ''உன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன'' என்ருர்.

விருந்துண்ண வந்தவர் அனைவரின் மனதிலும் கேள்விகள் குமைகின்றன. ''பாவங்களைக்கூட மன்னிக்கிருரே! அப்படியானுல் இவர் யார்?''

அகத்திலுள்ளதையும் அறியும் வல்லமை கொண்ட இறைமகன் அவர்களது ஐயங்களை உணருகிருர். ஆயினும் அவர்களுக்கு எதையும் கூருது, மீண்டும் அந்தப் பெண்ணைப் பார்த்து ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானமாகப் போ'' என்று அன்புக் கட்டளையிடுகிருர்.

இறைவனில் நாம் வைக்கும் அன்பு உள்ளரங்கமானதாக மாத்திரமின்றி செயல்களாலும் காட்டப்பட வேண்டும் என்பதை எவ்வளவு தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார் இறைமகன். ஆலயம் செல்வதும், ஆண்டவரை நோக்கி கையெடுத்துச் செபிப்பதும் வேண்டியதில்லை. உள்ளரங்கமாக இறைவனைத் தியானித்தால் போதும் என்று இதுவரை எண்ணிக் கொண்டிருக்கும் எமக்கெல்லாம், நற்கிரிகைகளோடு கூடிய விசுவாசத்தையே இறைவன் விரும்புகிருன் என்பதை அறியும் போது மனமாற்றம் ஏற்படாமல் இருக்க முடியுமா?

(புனித மதலேனம்மாள் திருநாள் ஜுலை 22) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இருளிலிருந்து......

"ஜெயம்"

இருள் விலகி ஒளி வருகிறது. இளஞ் சூரியனின் ஒளிக்கதிர் கண்டு இருள் அரக்கன் பயந்து ஓடுகின்றான். இருளில் உறங்கிக் கிடந்த உலகம் ஒளியில் விழித்துக்கொள்கிறது. இருள் விலகி ஒளி வந்ததும் புதுப் பொலிவுண்டாகின்றது. சேவல் அறை கூவி அழைக்கப் பறவையினம் கட்டியங் கூறி வரவேற்கின்றது. இப்படியான அந்த ஒளி வரும் வேளையிலே எல்லாம் புத்துணர்வு கொள்ள சில்வஸ்ரர் அந்த அறையில் தூங்கிக்கொண்டிருந்தான். தலை மட்டும் போர்வைக்கு வெளியே தெரிவதால் அதில் அவன் படுத்திருக்கின்றான் என அறிந்து கொள்ள முடிகின்றது. வயிறோடு முதுகு ஒட்டி கட்டிலோடு கட்டிலாக அசைவின்றிக் கிடந்தான். அந்த முனகல்ச் சத்தம் மட்டும் அவனிடமிருந்து வராவிட்டால் உயிர் இருப்பது கூடத் தெரியாது.

சில்வஸ்ரர் தன் வாழ்நாளில் ஒரு நாளாவது சோர்ந்து படுத்தவனல்ல. உறுதியான உடலும். உண்மையான உள்ளமுங் கொண்ட உத்தம கத்தோலிக்கன். திருமணமாகி இரு குழந்தைகளுக்குத் தாயாகிய சில்வஸ்ரரின் மனைவி தேவமணியும் நல்ல குணவதி. கணவனின் உளமறிந்து நடக்கும் உத்தமப் பெண். உண்மை, அன்பு, விசுவாசம் இவைகளைக் கொள்கையாகக் கொண்ட ஒரு நல்ல குடும்பம். இந்த நல்ல குடும்பத்தின் தலைவன் தான் இங்கு அசைவின்றிக் கிடக்கின்றான். சாதாரண தலைவலியைக்கூட இதுவரை அறிந்திராத சில்வஸ்ரரை இந்த வயிற்றுவலி எலும்புக் கூடாக்கி விட்டது. தேவமணியும் தனக்குத் தெரிந்த வைத்தியம் எல்லாம் செய்துவிட்டாள். முடியாத நிலையில் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றாள். எத்தனை தான் மருந்து செய்தும் அவனுக்குச் சுகம் வரவில்லை. இது தேவமணிக்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்தது. திரு இருதயநாதரிடம் தினமும் தன் கணவனுக்காகப் பிரார்த்தித்து வந்தாள்.

''ஐயோ........ அம்மா.... .... அப்பா.... .... ஆ........ இம்........'' சில்வஸ்ரரின் முனகல் சற்று அதிகமாகக் கேட்கிறது. ஏதோ அலுவலாக நின்ற தேவமணி அதை அப்படியே போட்டுவிட்டு, கணவனிடம் ஓடிவந்தாள். "என்ன, கூப்பிட்டீங்களா?" என அன்பாகக் கேட்டுக் கொண்டு அருகிலமர்ந்து அவன் தலையை வருடிவிடுகிறாள். அந்தச் சுகமான அணைப்பில் ''ஆ.... அம்மா.... யேசுவே....'' சில்வஸ்ரர் கண் திறந்து பார்க்கிறான். ''என்னப்பா, என்ன செய்யிது?'' தேவமணி வேதனையுடன் வினவுகிறாள். ''அ........ ஒண்டுமில்ல........ வயிற்ற நோகுது........ அ.... அம்.... மா'' வலி பொறுக்கமுடியாமல் துடிக்கிறான். கணவனின் துயரம் பொறுக்க முடியாமல் மனைவி கண்ணீர் விடுகிறாள். அந்த அன்பான கணவன் அவ்வளவு உபாதையிலும் மனைவியின் கண்களைத் துடைத்துவிட்டு, ''அழாத.... மணி........ அ........'' இதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை. நோயின் வேதனையும், நெஞ்சின் துயரமும் தொண்டையை அடைத்து விட்டது. அதற்கு மேல் அவளால் அதைத் தாங்க முடியவில்லை. அவன் மார்பில் முகம் புதைத்து, மடை திறந்த வெள்ளம் போல ''கோ''வென்று அழுதாள்.

''புள்ளை........ புள்ளை........ மணி'' கூப்பிட்டுக் கொண்டே செல்லம்மாக்கிழவி வருகிறாள். தேவமணி சட்டென்று எழுந்து தன்னைச் சரிபடுத்திக் கொண்டாள். ''ஆரது? ஆச்சியா! வாங்க''. உணர்ச்சியை உள்ளடக்கிக் கொண்டு கிழவியை வரவேற்றாள். செல்லம்மாக்கிழவி அந்த வட்டாரத்திற்கு முக்கியமானவள். பிரசவ வீடு, நோயாளருக்குக் காவல், மரித்த வீட்டில் விழித்தல், குழந்தை வைத்தியம், பெண்களுடன் துணையாகப் போவது இப்படியான பல வேலைகளைச் சமயமறிந்து செய்வதாலும், அயலவர்களுக்குக் கொடுக்கல், வாங்கல் வசதிகளேற்படுத்திக் கொடுப்பதாலும் கிழவிக்கு அவர்கள் இந்த முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தார்கள். இப்படியான வேலைகளையும், வசதிகளையும் செய்வதின் மூலம்தான் அவளது சீவியமும் நடந்து கொண்டிருந்தது. இந்தக் கிழவியைத் தான் தேவமணி வரவேற்றாள். ''எப்படிப்

(4ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இருளிலிருந்து......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

புள்ளை தம்பியிட பாடு'' என்று விசாரித்துக் கொண்டே உள்ளுக்கு வருகிறுள். மூப்பின் தளர்ச்சியினுல் உடல் சற்றுக் கூனி நின்ருள். பல்லில்லாத பொக்கை வாயை வெற்றிலேயினுல் நிரப்பி, அதை மெல்ல முடியாமல் குதப்பிக் கொண்டிருந்தாள். சிவந்த மேனி சுருங்கித் தொங்க சிரித்த முகத்துடன் வந்தாள். ''அப்படித்தான் ஆச்சி இருக்குது இனி என்ன செய்கிறதெண்டு தெரியல்ல எனக்கு''. தேவமணிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கிழவி சில்வஸ்ரரை உற்றுப் பார்த்து விட்டு ''இதென்ன புள்ளை, தம்பி இப்படிக் கிடக்கிறெென்ன, நீ கவனியாமல் இருக்கிறெென்ன'' குற்றஞ் சாட்டுவது போல் பேசினுள் கிழவி. ''என்னுச்சி செய்ய? தமிழ் மருந்து, இங்கிலீஸ் மருத்து எண்டு நான் செய்யாத மருந்தில்ல. காசுகாசெண்டு பாராம எவ்வளவோ செய்றன். இண்டைக்கு பதினேஞ்சி நாளா இந்த மனிசன் படுற பாடு என்னுல் பொறுக்க முடியல்ல'' நெஞ்சு விம்மி அழுகை வந்து விட்டது. தன் இல்லற ஜோதி அணேந்து விடுமோ? தான் மொட்டை மரமாக நிற்க நேருமோ? தன் குழந்தைகளுடன் சீர்குலேய நேருமோ? இப்படியாக அந்த நொடியில் பலவாறு சிந்திக்க அவள் மென்னுடல் ஒருமுறை நடுங்கிற்று. அவள் மனதை அறிந்து கொண்ட கிழவி, பக்குவமான உரிமையுடன் ஆறுதல் சொன்னுள். ''சீ.... சீ.... பயித்தியகாரி. ஏன் அழுகிருய்? இப்ப என்ன நடந்திற்று? சும்மா கத்தாத, போகப்போக சுகம் வரும், நீ கண்ணத்துடை மகள்'' என்ருள். சிறிது நேரம் மௌனம் நிலவிய போதும் தேவமணி விம்மியவாறிருந்தாள். மீண்டும் கிழவியே பேசத் தொடங்கினுள். ''இஞ்சே.... புள்ளை எனக்கு ஒரு யோசின தோன்றுது இந்த மருந்துகளுக்கெல்லாம் சுகப்படாட்டி, இது வருத்தமில்ல, வேற ஏதோ பொடியனுக்கு நடந்திருக்க வேணும் போல இருக்கு'' சந்தேகத்தைக் கிளப்பினுள் கிழவி. தேவமணிக்கு ஒன்றும் புரியவில்லே. ''என்னுச்சி சொன்னீங்க?'' கண்களேத் துடைத்துக் கொண்டு கேட்டாள். ''இல்ல.. மகள் இது வருத்தமெண்டா செய்த மருந்துகளுக்குச் சுகம் வந்திருக்க வேணுமே. இது வருத்தமில்ல புள்ளை, இது பேய்க் கோளாறு போல இருக்கு'' என்ருள் கிழவி. தேவமணி பயந்து விட்டாள். பேய், சூனியம் இவைகளேப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருள். ஆனுல், அவைகளே நம்புவதில்லே முறையான கத்தோலிக்க வழி நடப்பவளல்லவா? அவள் இதை நம்புவாளா? ஆனுலும் கிழவி விடவில்லே. கனகச்சிதமாகத் தான் சொல்லியது சரியென நிரூபித்தாள். இதற்கு முன் பிறருக்கு ஏற்பட்ட இதுபோன்ற சம்பவங்களே உதாரணமாகச் சொல்லி தேவமணியையும் நம்பவைத்து விட்டாள். ''அப்பிடியெண்டா என்னுச்சி செய்ற'' தேவமணி பயத்துடன் கேட்டாள். அவள் பயத்தைப் பயன்படுத்திக் கொண்ட கிழவி, ''முதல்ல ஒரு சாத்திரம் கேட்டுப் பாப்பம், புறகு சாத்திரி சொல்றபடிதான் செய்யனும்'' என்று யோசனே சொன்னுள். தன் கணவனுக்கு சுகம் ஏற்பட்டால் போதும் என்று கிழவியின் யோசனேப் படி நடக்கத் துணிந்தாலும், சில்வஸ்ரர் இதற்கு இணங்கமாட்டான் என்று அவளுக்கு நன்ருகத் தெரியும். இதனுல் சற்று யோசித்தாள். ''என்ன புள்ளை யோசிக்கிறு, பயப்படுறீயோ?'' கிழவி கேட்டாள். ''இல்ல.... இதுக்கெல்லாம் இவர் ஒத்துக்கொள்ள வேணுமே எண்டுதான் யோசிக்கிறன். நாங்க கத்தோலிக்கர் இதுகளே நம்பக் கூடாது. உங்களுக்குத்தான் தெரியுமே இவர்ர குணம். இதுகள்ள மிச்சம் கண்டிப்பான மனிசன்'' என்ருள் தேவமணி யோசனேயுடன். ''அப்படிப் பாத்தா வருத்தம் சுகப்படுத்த ஏலாது. இப்ப என்ன செய்யப்போறம் நோய்க்கு மருந்துதானே; அது தமிழ் முறையில செய்யிறதெண்டா இப்படியெல்லாம் செய்யத்தான் வேணும். அதிலயும் இப்ப என்ன, ஊருக்கு சொல்லியா செய்யப்போறம்? காதோட காது வச்சாப்போல விசயத்த முடிச்சிரலாம். தம்பிற்ர நான் சொல்லுறன்'' என்று கிழவி எழுந்தாள். அவளுக்கு முன் தேவமணி பதறி எழுந்து ''இல்ல ஆச்சி, இப்ப வேணும், நான் ஆறுதலா சொல்லுறன்'' என்று தடுத்தாள். ''ஏதோ வருத்தம் சுகமாக வழி சொல்லுறன், விரும்பினுச் செய் இல்லாட்டி அனுபவி, நான் வாறன்'' என்று எச்சரிக்கும் குரலில் கூறிவிட்டு கிளம்பினுள் கிழவி. 'அனுபவி' என்ற சொல் தேவமணியை யோசிக்கச் செய்துவிட்டது. கணவன் இல்லாவிடில் தான் கஷ்டம் அனுபவிப்பதைத்தானே கிழவி மறைமுகமாகக் கூறினுள், என்று தேவமணிக்குத் தெரியும். அப்படியான ஒரு கொடுமையை எண்ணிப் பார்க்கவும் நடுங்கினுள். சில்வஸ்ரரிடம் இதைப் பற்றிச் சொன்னபோது அவ்வளவு வருத்தத்துடனும் ஆத்திரமாக ''உனக்கென்ன பயித்தியமா? எவ்வளவு பெரிய பாவத்தை செய்ய நினேத்திருக்கிருய்? நமது சமயத்துக்கு மாருன காரியத்தை செய்து

(5ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இருளிலிருந்து......

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சுகம் வருவதைக் காட்டிலும் செத்துமடிவது மேல்'' என்று மறுத்து விட்டான். அதிகம் பேசியதினால் இளைப்பும் பெலவீனமும் மேலிடக் கண்ணை மூடிக்கொண்டான். தேவமணி விடுவதாயில்லை. கிழவியின் 'அனுபவி' என்ற சொல்லும், கணவனின் 'செத்துமடிவது' என்ற பதமும் சேர்ந்து அவளைப் பயமுறுத்திற்று. கணவனுக்கு மரணம் கிட்டி விட்டது போலவும், அதைத் தடுக்க அவள் கங்கணங் கட்டி நிற்பது போலவும் உணர்ச்சி ஏற்பட்டது. இந்த உணர்ச்சி வெறியில் கணவனின் வார்த்தையையும் மீறிப் பாவம் செய்யத் துணிந்து விட்டாள். ஆதாமை பாவம் செய்யத் தூண்டியது ஏவாள்தானே? அதே நிலை இங்கேயும் தொடர்கிறது. உடலும் உள்ளமும் நொந்து போயிருக்கும் நேரத்தில்த் தான் பசாசின் சோதனையும் மிகுதியாகிறது. இதே நிலைதான் சில்வஸ்ரருக்கும். நோயின் பெலவீனத்தினால் பதில் பேசமுடியாமல் மௌனமாக இருந்தான். இந்த மௌனத்தை சம்மதத்தின் அறிகுறி என எண்ணிக் கொண்டு கிழவி கூறியபடி செயலில் இறங்கினாள்.

சாஸ்திரம் பார்க்கத் தேவையான வெற்றிலை பாக்கு சகிதம் கிழவி சாஸ்திரியாரிடம் சென்றாள். சாஸ்திரம் சொல்லுபவர்கள் சொல்லுவதெல்லாம் உண்மையோ, பொய்யோ நமக்குத் தெரியாது. ஆனால், அவர்கள் சொல்லும் விதத்தில் கேட்பவர்கள் யாராயினும் நம்பிவிடுவார்கள். அப்படியொரு வாக்கு சாதுரியம் அவர்களிடம் இருக்கின்றது. அப்படியுமில்லாவிட்டால் அவர்கள் பிழைக்க முடியாதுதான். அவரவர் மனநிலைக்கேற்ப வாதம் என்றால் வாதம் என்றும், பூதமென்றால் பூதம் என்றும் சொல்லி நம்ப வைத்து விடுவார்கள். ஒருவர் நினைத்த காரியத்தை, அவரிடம் கேட்கும் கேள்விகள் மூலம் அறிந்து கொண்டு, பிறகு இதைத் தானே நினைக்கிறீர்கள் என்று தங்கள் வாயாற் சொல்லி கேட்பவரை நம்ப வைத்து விடுவார்கள். எதிர்காலத்தையும், நினைத்த காரியத்தையும் வெற்றிலையில் அறிந்து கொள்ள முடியுமானால், உலகில் உள்ளவர்கள் எல்லாரும் தங்களுக்கு வரப்போகும் கஷ்டங்களை முன் கூட்டியே அறிந்து, அதற்கான வழிவகைகளையும் மேற்கொள்வார்களே! அப்படி எத்தனை பேர் கஷ்டமின்றிச் சீவிக்கிறார்கள்? இவைகளைச் சிந்திக்கவோ, சீர்தூக்கிப் பார்க்கக் கூடிய அறிவோ, அவகாசமோ இல்லாத பாமர மக்கள்தான் அநேகமாக இப்படியான செயல்களில் அகப்படுகின்றார்கள். இந்த வரிசையிலுள்ள கிழவியின் பேய் மனதை அறிந்து கொண்டு, 'பேய்' என்று சொல்ல சாஸ்திரிக்கும் நேரமாகவில்லை. தான் நினைத்ததை அவன் அப்படியே சொல்லி விட்டான். தனது யுகம் சரியாகி விட்ட வெற்றிப் பெருமிதத்தில் தேவமணியிடம் வந்து விஷயத்தைச் சொன்னாள். ஏற்கனவே பயந்து கொண்டிருந்தவளுக்குக் கிழவியின் பதில் இன்னும் பயத்தை உண்டாக்கியது. எனவே, அதைத் தடுப்பதற்கான யோசனையும் கிழவியிடமே கேட்டாள். கிழவிக்கும் இப்படியான சந்தர்ப்பங்களில்த் தானே நல்ல வரும்படி, இதை விடுவாளா கிழவி? சிறிது நேர யோசனைக்குப் பின் ''செய்து கழிக்க வேண்டும்'' என்றாள். தேவமணிக்கு இது புரியவில்லை, பேசாதிருந்தாள். இதற்காகப் பாக்கு, பழம், பத்தி போன்ற சாமான்களுக்கும், செய்வனை காரனுக்குமாக ரூபா நூறும் கிழவியின் கைமாறியது. மீண்டும் கிழவி வந்த போது ஒரு மஞ்சள் நிற நூலும், மந்திரித்த நீறும், ஒரு செம்புத் தண்ணீரும் கொண்டுவந்து கொடுத்தாள். நூல் இடுப்பில்க் கட்டுவதற்கும், நீறு வயிற்றில் பூசுவதற்கும், தண்ணீர் உடம்பைக் கழுவுவதற்கும் என விபரங்களைக் கூறினாள். நூறு ரூபாவுக்கான இந்த சாமான்களைக் கொடுத்து விட்டு, மூன்று நாட்களில் குணம் தெரியும் என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டாள் கிழவி. அவளுடைய மயக்கு வார்த்தைகளை நம்பி, தான் என்ன செய்கிறாள் என்று தெரியாமல், சில்வஸ்ரருக்கு நூல், நீறு இவைகளைப் போட்டு தண்ணீரால் கழுவி விட்டாள் தேவமணி. அவனும் நோயின் உபாதையினால் நடப்பதை அறிந்து கொள்ளவோ, அதைத் தடுக்கவோ முடியாதவனாய்க் கண்மூடி நினைவற்றுக் கிடந்தான்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன, ஆனால் சில்வஸ்ரரின் நோய் நகரவேயில்லை அடிப்படையில் ஆத்மீக எண்ணமும் ஆண்டவனின் சிந்தனையுமில்லாத எந்தச் செயலும் வெற்றியடைய முடியாது. இதற்கு ஒரு உதாரணம் செல்லம்மாக் கிழவியின் யோசனைப்படி தேவமணி செய்த செயல். தேவமணி மிகவும் பயந்து விட்டாள், செய்யக்கூடாத ஒரு காரியத்தை செய்துவிட்ட குற்ற மனப்பான்மையினால் தினம் தினம் பயந்து செத்துக்கொண்டிருந்தாள் தன் கணவனின் நோயில் ஒரு வித மாற்றமுமில்லாதது கண்டு கலங்கினாள்.

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இருளிலிருந்து......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தான் கடவுளில் நம்பிக்கையில்லாமல் செய்த காரியத்தினுல், கணவனுக்கு ஏதாவது நேர்ந்து, அதன் மூலம் தனக்கு தண்டனை அளிக்கப்போகிருரோ, என்று பயந்து நடுங்கினுள். ஆனுல், எல்லாவற்றையுமே அறிந்த கடவுள் அவளை அன்பாக நோக்கிக் கொண்டிருந்தார்.

கிழவியுடன் காதோடு காது வைத்தாற் போல விஷயத்தைச் செய்தாலும் அது எப்படியோ வெளிவந்துவிட்டது. இருளில் நடந்ததும், மறைவில் நடந்ததும் வெளியில் வராமற் போகாது. இந்த விஷயம் பங்குக் குருவானவர் வரைக்கும் தெரிந்து, ஒருநாள் குருவானவர் அவர்கள் வீட்டுக்கு வந்தபோது தேவமணி பயந்துவிட்டாள். அவர் முகத்தைப் பார்க்கவே பயந்து, பேசாமல் தலை குனிந்து கொண்டாள். குற்றமுள்ள நெஞ்சு குமுறிக்கொண்டிருந்தது. இவளது நிலையை அறிந்து கொண்ட குருவானவரும், அவளுக்குத் தகுந்த அறிவுரைகளைக் கூறினுர். முதலாம் கட்டளையை வெகு அழகாக விளங்கப் படுத்தினுர். தேவமணி அழுதாள்.... அழுதாள் முடிவில்லாமல் அழுதாள். அழுதுகொண்டே தனது முழுக் குற்றத்தையும் ஒப்புக் கொண்டாள். திக்குத் தெரியாத இருளில் அவள் தடுமாறுகின்றுள். திடமான நல்ல ஆலோசனைகள் சொல்ல யாருமில்லை. இதனுல் இவ்வளவும் நேர்ந்துவிட்டது. எனவே, குருவானவரின் யோசனையின் பேரில், சில்வஸ்ரரை கொழும்புக்கு அனுப்பி, பிரத்தியோக வைத்திய விடுதியில், விசேஷ பயிற்சி பெற்ற வைத்தியர் மூலம் சிகிச்சையளிக்கப்பட்டது. தேவமணியும் திரு இருதயநாதரிடம் முழு விசுவாசத்தையும் வைத்து கணவனுக்கு சிகிச்சை செய்தாள்.

இயேசுவின் திரு இருதயத்திடம் தங்களை ஒப்படைத்தவர்கள் எவரும் சிதறவில்லை. அந்த அன்பு ஜோதியில் அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன. இதோ சில்வஸ்ரரும் குணமடைந்து விட்டான். தேவமணியும் மகிழ்ச்சியுற்றுள். ஆண்டவருக்கு நன்றியறிதல் சொன்னுள். அவள் முகத்தில் ஒரு பொலிவு ஏற்பட்டது. அஞ்ஞான இருள் விலகி மெய்ஞான ஒளிபெற்ற பொலிவு. திக்குத் தெரியாத அகால இருளிலிருந்து திரு இருதயத்தின் அன்பு ஒளி பெற்றுவிட்டது அந்தக் குடும்பம்.

(யாவும் கற்பனை)

## குருதி

அற்புத குருதி அருள் நிறை அன்பர்
அர்ப்பணித்த அந்த அரிய குருதி
திருவழிபாட்டில் திராட்சை இரசம்
திவ்விய ஊட்டமாய் மாறும் குருதி
அன்புப் பணிவுடன் பிதாவின் சித்தம்
அறம் உண்மை, நேர்மை காட்டும் குருதி
மாட்டுத தொழுவ மண்ணில் மறைந்த
மாமரி ஊட்டிய உணவின் குருதி
மாதவன் சூசை உழைத்த உணவின்
மாதவம் செய்தோன் போற்றும் குருதி
வியர்வையாய் வியர்த்து ஜெய்த்தமனியில்
வியப்புடன் விளங்கும் வியாகுலக் குருதி
முப்பது வெள்ளிக் காசு விலை கூறினும்
மூவுலகத்தோரும் விலை காணுக் குருதி
எண்சாணுடம்பிற்கு அடக்கம் அளிக்க—
குயவன் மண்ணுக்கு அளித்த குருதி
குற்றமற்ற குருதி என்று யூதாஸ் கூறி
குறைதனை நினைத்து வருந்தவைத்த குருதி
சீரோன் சிமியோன் தோளை நனைத்து
சீரான வரோணிக்காள் துடைத்த
—குருதி
அடித்த கசையை நன்ருக நனைத்து
கட்டிய கற்றூணிற் கறள் படிந்த குருதி
அறைந்த மரத்தைச் செந்நிறமாக்கி
அன்று கல்வாரியிற் சிந்திய குருதி
உருகிய அன்பு விலாவில் ஓடி
உணவும் ஒளியும் ஆகிய குருதி
இராச குலத்தின் உயர்வான குருதி
மனுக்குல் பாவம் கழுவிய குருதி
இரட்சணிய பாதை காட்டும் குருதி
இரட்சகர் இன்றும் அளிக்கும் குருதி
போற்றுவோம் உலகு உள்ளளவும் குருதி
புகழ் சாற்றுவோம் மூன்று உலகிலும்
—நாமே!

சகோதரி விடலீனு அ. கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வு

(தேவப்பிரியன்)

## 7. கிறிஸ்துவே கிறிஸ்தவ வாழ்க்கை

'அப்பா நீங்கள் சொல்வது எனக்கு முற்றும் தெளிவாக விளங்காவிட்டாலும் ஒன்று மாத்திரம் உறுதியளிக்கின்றது. அதாவது 'கிறிஸ்து உலகின் மையம். கிறிஸ்தவன், கிறிஸ்துவை உலகில் உணரவேண்டும். அதனால் அவனைச் சுற்றி வாழ்வோர் கிறிஸ்துவை அறியவேண்டும்'.

மலர்விழி உனக்கு ஒன்றுமே புரியவில்லை என்று கூறுவதைவிட எல்லாமே விளங்கிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் நீ கூறியதுதான் நான் உனக்குச் சொன்னதின் சாரமும், சொல்லப்போவதின் சாரமும்.

நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல் சரித்திரத்தில் உள்ள நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரு அழியாத்தன்மை பெற்றவை. நித்தியத்திற்கும் நிலைத்திருப்பவை. சரித்திரக் கண்கொண்டு பார்க்கையில் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அர்த்தமற்றவை, தோன்றி மறைபவை. ஆனால் விசுவாசக் கண்கொண்டு நோக்குபவனுக்கு அதன்பின்னால் மறைந்திருக்கும் கடவுளின் கரம் தெரியும். சரித்திர நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பார்க்கையில் இதன் உண்மை விளங்கும். ஆகையினால்தான் சாதாரண நிகழ்ச்சிகளாய் நடந்தேறிய எத்தனையோ விடயங்கள் இஸ்ராயேலருடைய சரித்திரத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றன; அழியாமல் இன்னும் நிலைத்து நிற்கின்றன. இந்த அழியாத் தன்மை தாங்கிய சரித்திர நிகழ்ச்சிகளைத்தான் நாம் 'மீட்பின் சரித்திரம்' என்று அழைக்கின்றோம். ஏனெனில் இந்தச் சரித்திர நிகழ்ச்சிகளின் மூலமாகத்தான் கடவுள் விஷேச விதமாகத் தம்முடைய மீட்பின் இரகசியத்தை மனிதகுலம் அறியும்படி செய்தார். சரித்திரக் கண்கொண்டு பார்க்கும்போது ஒவ்வொரு நிகழ்ச்சியும் சர்வ சாதாரண நிகழ்ச்சியாகவும் திரும்பவும் நடைபெற முடியாததொன்றாகவும், நிரந்தரமாய் மறைந்துபோகக் கூடியதாகவும் தெரிகிறது. ஆனால் இஸ்ராயேல் மக்களுடைய சரித்திரம் நமக்குக் கூறும் சான்றோ நேர்மாறானதாக இருக்கிறது. அவர்களுடைய சரித்திரத்தில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் கடவுளுடைய வலிய கரத்தினால் நடத்தப்பெற்றவையாயும், என்றும் அழியா நிலையைப் பெற்றவையாயும் இருப்பதைக் காண்கிறோம்.

இந்தச் சரித்திரத்தில் கிறிஸ்துவே மையமாக இருக்கிறார். இந்த உண்மையை யூதர் பலர் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்; **ஆனால் ஏற்றுக்கொள்வதால் ஒன்றும் உண்மையாவதும் இல்லை; அதேபோல் ஏற்றுக்கொள்ளாததால் அது பொய்யாவதும் இல்லை. உண்மையும் பொய்யும் மனிதனில் அல்ல, கடவுளில் தங்கியுள்ளது. அவர் இருக்கும் வாழ்க்கையே மெய், அவர் இல்லாத வாழ்க்கையே பொய்.** ஆகவே இஸ்ராயேல் மக்களுடைய சரித்திரத்தில் கிறிஸ்துவுக்கு முன் சென்றவை, கிறிஸ்துவின் வருகைக்கான ஆயத்தமாகவும்; அவருக்குப் பின் வருபவை அவர் அடைந்து தந்த இரட்சிப்பின் பயனையடையும் காலமாகவும்; அவர் வாழ்ந்த காலம் கடவுளின் இரக்கத்தை மனுவுருவில் கண்ட காலமாகவும் இருக்கிறது.

இதே சரித்திரத்தில் திருச்சபையானது கிறிஸ்துவின் மீட்பின் கொடைகளை வாரி வழங்கும் இரட்சணியத்தின் கடலாய் விளங்குகிறது. கிறிஸ்து அடைந்துதந்த இரட்சிப்பின் பலனை ஒவ்வொரு மனிதனுக்கும் அள்ளி வளங்கும் அலுவலே திருச்சபையின் முக்கிய அலுவல். இதையே திருச்சபை திருவருட்சாதனங்களின் (தேவதிரவிய அனுமானங்கள்) மூலமாகவும், திருப்பலி மூலமாகவும் செய்துவருகின்றது என்று சொன்னால் மிகையாகாது. இதுவே திருச்சபையின் வாழ்க்கை.

திருச்சபையின் வாழ்க்கை இதுவானால் கிறிஸ்தவனின் வாழ்க்கை எதுவாக இருக்க வேண்டுமென்று பார்ப்போம். மனிதன் கட

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் இல்லம்

## புனிதர் இன்ஞசியார் தரும் பாடம்.

(காமல் இக்னேஷியஸ், மட்டுநகர்.)

இளைஞர் சமுதாயமே! புனிதர் லொயோலா இன்ஞசியாரின் திருநாள் இம்மாதம் 31ந் திகதி வருகின்றது.

இளைஞன் லொயோலா வாழ்ந்த வாழ்க்கை புரிகின்றதா? அது உங்கட்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

**புகழ் ஏணியிலே .......**

ஆண்டுதோறும் ஆடித்திங்கள் முப்பத்தோராம் நாள் கத்தோலிக்க திருச்சபை புனிதர் லொயோலா இஞ்ஞாசியாருக்கு விழா எடுக்கின்றது. குறிப்பாக யேசுசபைத் துறவிகள் இத்தினத்தைப் பெரு வைபவமாகக் கொள்வர். உருண்டோடும் உலகிலே மக்களுக்கு வழிகாட்டிகளாய் வாழ்ந்து மடிந்த மகான்களில் ஒருவரான இப்பெரியாரின புகழ் காலவிரைவில் இலைமறை காய்போல் ஆகிவிட்ட தெனினும் எதிர்கால உலகில் வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்கு - இன்றைய கத்தோலிக்க வாலிப சமுதாயத்தினருக்கு புனிதர் லொயோலாவின் வாழ்வுப் பாதை என்றும் தகுந்ததோர் பாடமாகும்.

**போர்க்களத்திலே .... ....**

1491ம் வருடம் ஸ்பெயின் நாட்டிலே கல்வி - செல்வம் - வீரம் ஒருங்கிணைந்த குடும்பம் ஒன்றிலே லொயோலா தோன்றினார். அவர் வளர்ந்து வாலிபனாக மாறிய வேளையிலேதான் அந்த அதிர்ச்சியுறும் நிகழ்ச்சி நடந்தேறியது. தன் தாய்நாட்டை மாற்றான் படை அழிக்கவரும் செய்தியறிந்தார், "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனிசிறந்தெனவே" இளம் இரத்தம் துடித்தது. தாய்த்திருநாடு காக்கத் தன் அரசனுக்காகப் போர்க்களத்திலே போர் பொருதி வேல் முனையிலே வெற்றிகாணப் புறப்பட்டார். நடந்ததென்ன? பிரான்ஸ் நாட்டு வீரனொருவன் விடுத்த குண்டு கோட்டைச் சுவரைப் பதம் பார்க்கவேண்டியது லொயோலாவின் காலை அல்லவா பதம்பார்த்து விட்டது?

**மனத்தளத்திலே .... ....**

வீரம் - பெருமை - காதல் இவற்றையே கனவும் நினைவுமாகக் கொண்ட வாலிப வாழ்வில் இப்படி ஒரு பேரிடியா? மைந்தனின் வருங்காலம் எவ்வாறு நகரப் போகின்றது? வீரம் குறைந்து - பெருமை குன்றி - காதல் இழந்து வைத்தியசாலை விடுதி ஒன்றிலே கட்டில் விழுந்தார். மனதிலே போராட்டம், எதிர்பாராத சம்பவம். தாங்குவது எவ்வாறு? கவலையைக் கலைக்க விரும்பி சுவையான நாவல்களையும் சிறுகதைகளையும் படிக்கத்தேடினார். அங்கு பார்வையில் பட்டதெல்லாம் கிறீஸ்து வேந்தரின் வாழ்க்கை நூல்களும் புனிதர்களின் வரலாறுகளுமேதான். இன்றைய இளைஞருக்கு இவ்வித சமய நூல்கள் வேம்பாய்க் கசக்கும் நிலைதான் அன்று இளைஞன் லொயோலாவுக்கும் ஏற்பட்டிருந்ததில் வியப்பில்லை. தனக்குப் பிடித்தமான ஆபாசமான சஞ்சிகைகள் ஒன்றும் அந்த விடுதியில் கிடைக்காமை குறித்து வருந்தினார். எனினும் பொழுதைப்போக்க எண்ணி வெறுப்புடன் சமய நூல்களை வாசிக்க முற்பட்டார். வைத்திய அதிகாரிகளோ லொயோலாவின் வருங்காலத்திலே மிகக் கவனம் கொண்டு சிகிச்சை அளிப்பதில் ஆர்வம் காட்டி வந்தனர்.

**சிந்தனை ஓட்டத்திலே .... ....**

நாட்கள் நகர்ந்தன, நூல்களைப் படிப்பதிலேயே சிந்தனை ஓடியது. அந்த ஓட்டம் வேறு திசை நாடியது, இதனால் வாழ்க்கையாறு திசைமாறித்தான் ஓடவேண்டுமா? அல்லது .... .... போராட்டம் வேகமாகிக் கொண்டிருந்தது. இந்நிலையில் மாதங்கள் பல மறைந்தன. வைத்திய நிபுணர்கள் முயற்சிகள் யாவும் லொயோலாவின் குண்டு துளைத்த காயங்களைக் குணமாக்கவே முடிந்தது தவிர நொண்டித் தன்மையை முற்றாக மாற்றிவிட முடியவேயில்லை. இளைஞனின் மனப்போராட்டமோ மிகத் தீவிரமடைந்தது, உலக நாட்

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்னையின் தண்டனை

(அ. அனஸ்டின் பத்திநாதன்)

அன்று போயா தினம். காலை அழகு திருகோணமலைப் பட்டணத்தை இன்னும் கவர்ச்சியாகக் காட்டியது. நேரம் காலை ஆறு மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. கதிரவனின் பொன்னிற இள வெயிலில் மரங்கள் புதுப் பொலிவுடன் பொலிந்தன. காலைக் காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. பட்சிகள் பலவித இன்னிசையைப் பரப்பியவாறே தமது கூடுகளை விட்டு வெளிவந்தன. மக்கள் தங்கள் காலைக் கடன்களைச் செய்வதில் மிகச் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் திருகோணமலைப் பட்டிணத்திற்கு மேலும் தனிச் சோபையை ஏற்படுத்திக்கொண்டிருந்த அடர்ந்த மரங்களால் சூழப்பட்டிருந்த காட்டின் நடுவே அழகென அமைந்த பாலையூற்று லூர்துமாதா கோவில் மணி டாண்! டாண்! என்று பல முறை ஒலித்தது. மணியின் ஓசை காற்றில் தவழ்ந்து எல்லா இடமும் எதிரொலித்தது. அந்த மணியோசை வில்லியின் காதுகளில் விழுந்ததும் அவள் அவசர அவசரமாகப் படுக்கையை விட்டெழுந்தாள். அதிக நேரம் தூங்கிவிட்டோமோ என்ற ஐயம் அவள் முகத்தில் தோன்றியது. நித்திரை விட்டெழுந்ததும் அவள் முதலில் நோக்குவது அன்னை மரியாளின் திருச் சொரூபத்தைத்தான். ஆம் அந்தச் சுரூபம் வில்லியின் படுக்கை அறையில் அவளுடைய படுக்கைக்கு எதிரில் வைக்கப்பட்டிருந்தது. சுரூபத்தை நோக்கிக் கரம் கூப்பியவள் தனக்குப் பக்கத்தில் இருந்த படுக்கையைப் பார்த்தாள். நாளாந்தம் அவள் காணும் காட்சி அது. அவளது கணவன் இரவு அருந்திய மதுவின் போதையால் வெகு நேரமாகியும் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். தினந்தம் இவ்வாறு குடித்துவிட்டு அலுவலகத்திற்குச் செல்லாமல் இருப்பது வில்லிக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது. நேற்றிரவுகூட மிதமிஞ்சிய போதையில் தள்ளாடிக்கொண்டிருந்த கணவனிடம் ''அத்தான், மரியாயின் சுரூபம் வைத்திருக்கும் பலகை உக்கி இருக்கின்றது. பலகை ஆட்டம்கண்டு சில சமயம் சுரூபம் கீழே விழுந்தால் சுக்கு நூறாகிவிடும்'' என்றாள். அதற்கு அவன் ''வில்லி அந்தச் சுரூபம் ஒருநாளும் கீழே விழாது. அதைப் பிறகு பார்ப்போம்'' என்று கூறியவாறே தள்ளாடிக்கொண்டு படுக்கையில் விழுந்தான். உக்கிய பலகையை மாற்றுவது பின்னர் தனக்கு ஒரு நன்மையாக முடியும் என்று வில்லி அந்நேரத்தில் நினைக்கவில்லை.

மைக்கலுக்கும் வில்லிக்கும் திருமணமாகி மூன்றாண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. திருமணத்தின்போது மைக்கலின் நண்பன் சுந்தரினால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது தான் அன்னை மரியாளின் அந்தத் திருச் சுரூபம். மூன்றடி உயரமுள்ள அந்தச் சுரூபம் மிக அழகானது. செல்வந்தனான சுந்தர் ஆரம்பத்தில் நல்லவனாகத்தான் இருந்தான். ஆனால் மைக்கல் – வில்லியின் திருமணத்தின் பின் அவன் முற்றிலும் மாறிவிட்டான். காரணம் அவன் ஆரம்பத்தில் வில்லியைத் திருமணம் செய்ய நினைத்திருந்தான். வில்லி மைக்கலைக் கணவனாக அடைந்தபின்னர் சுந்தர் பொறுமையை இழந்தான். எப்படியாவது வில்லியை அடையவேண்டுமென்ற எண்ணம் அவன் மனதில் வேரூன்றியது. அதன் முடிவு உத்தமனான மைக்கல் சுந்தரினால் குடிகாரனாக்கப்பட்டான். நாளாந்தம் சுந்தரும் மைக்கலும் நிறைந்த மதுபோதையில் வீட்டுக்கு வருவார்கள். மைக்கலை வீட்டில் விட்டுவிட்டுச் சுந்தர் திரும்பிவிடுவான். இது அன்றாட வழக்கமாகிவிட்டது.

அன்றும் அப்படித்தான் போயாதினமாகையால் மைக்கல் காலையிலேயே சுந்தரைத் தேடிக்கொண்டு கிளம்பிவிட்டான். வில்லிக்குத் தெரியும் கணவன் எந்த நிலையில் வீடு திரும்புவானென்று. காலைக்கடன்களை முடித்துக்கொண்ட வில்லி இன்று இதற்கு ஓர் முடிவு கட்டிவிட வேண்டும். நாளாந்தம் அவர் குடித்துக்கொண்டே இருந்தால், அவர் மதுவுக்கு அடிமையாகிக்கொண்டே இருந்தால், எங்கள் குடும்ப வாழ்க்கை எப்படி இனிதுற முடியும்? என எண்ணினாள். கணவனின் வரவை எதிர்பார்த்து வாசலிலேயே காத்து நின்றாள். இரவு நான்கு மணியளவில் சுந்தரும் மைக்கலும் ஒரு வாடகைக் காரில் வந்து இறங்கினார்கள். மதுவின் நெடி வில்லியின் வயிற்றைக் குமட்டியது. வாசலில் காலடி எடுத்துவைத்த கணவனை ''அங்கேயே நில்லுங்கள்'' என்ற வில்லியின் குரல் நிலைதடு

(10ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அன்னையின் தண்டனை......

(9ம் பக்கத் தொடர்ச்சி)

மாற வைத்தது. நிமிர்ந்து மனைவியைப் பார்த்தான். ''அத்தான் ஏனிப்படி தினம் தினம் குடித்துவிட்டு வந்து இந்தக் குடும்பத்தை நாசமாக்குகிறீர்கள்''. இதுதானு வாழ்க்கை? இதுதானு ஆண்டவர் காட்டிய இல்லறம்? இனிமேல் நீங்கள் குடித்தால் என்னை உயிருடன் காண முடியாது என்று கூறி அழுதவண்ணம் படுக்கையில் போய் விழுந்தாள்' லில்லி. மைக்கல் அதிர்ச்சியில் நாக்குழற லில்லி....! லில்லி....! நீ.... நீ....! அதற்குமேல் அவனுல் பேசமுடியவில்லை. வீட்டைவிட்டு வெளியே நடந்தான். எங்கே போகிறுன் என்று அவனுக்கே தெரியவில்லை. அவனது கால்கள் தாமாகவே பாலையூற்று ஹூர்துமாதா கோவில் முன்னுல் உள்ள பாடு பட்ட யேசுவின் சுரூபத்தின் காலடியில் போய் நின்றன. துன்ப மிகுதியால் இரத்தம் வழிந்தோடும் யேசுவின் திருமுகத்தைப் பார்க்கச் சக்தியற்ற மைக்கல் அப்படியே சோர்ந்து விழுந்தான். மைக்கலுடன் வந்த சுந்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு நின்றுன். மைக்கல் போய்விட்டான்; லில்லியின் தனிமை அவனை வெறிகொள்ளச் செய்தது. மீண்டும் மைக்கல் வருவானே என்ற சந்தேகத்தில் சிறிது நேரம் வாசலிலேயே நின்றுன். நேரம் போய்க்கொண்டேயிருந்தது. லில்லியின் படுக்கையறையில் நுழைந்தான் சுந்தர். ஒரே அமைதி; முரட்டுக் கரமொன்று தன் மேனியில் விழுவதை உணர்ந்த லில்லி தன் கணவர்தான் வந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியில் தலை நிமிர்ந்தாள். சுந்தரின் வெறிபிடித்த முகம் அவளை நிலைகுலைய வைத்தது. திரும்பி அறைக்கதவைப் பார்த்தாள். அது தாளிடப் பட்டிருந்தது. ஒரு வினுடியில் அவளுக்கு எல்லாமே விளங்கிவிட்டது. வீறிட்டுக் கத்திய லில்லி சுந்தரின் நெஞ்சைப் பிடித்துப் பின்னேக்கித் தள்ளினுள். சுவரோடு போய் மோதிய சுந்தர் மோதிய வேகத்தில் முன்னேக்கி ஓர் அடி எடுத்துவைத்தான். அதே நேரத்தில் சுந்தர் மோதி சுவர் அதிர்ந்ததால் ஏற்கனவே ஆட்டம் கண்டிருந்த அன்னை மரியாளின் திருச் சுரூபத்தைத் தாங்கிய பலகை உடைந்து அன்னையின் மூன்றடி உயரமுள்ள அந்தச் சுரூபம் சுந்தரின் தலைமீது விழுந்து சுக்குநூருகி நொருங்கியது. இரத்தம் வழிந்தோட நிலத்தில் சாய்ந்தான் சுந்தர். அங்கு கோயிலில் பாடுபட்ட சுரூபத்தின் காலடியில் விடியும்வரை உறங்கிக்கொண்டிருந்த மைக்கலின் மனதில் ஓர் புதிய வாழ்வின் ஒளி பரவிக்கொண்டிருந்தது. இங்கு அன்னையின் தண்டனையால் திருந்திய சுந்தரின் உயிர் அணைந்துகொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

---

## இளைஞர் இல்லம்............

[8ம் பக்கத் தொடர்ச்சி]

டம் மனதில் மங்கலாகிக் கொண்டிருந்தது. தீவிரமடைந்த போராட்டமும் இறுதி நிலைக்கு வந்தது. பூவுலக அரசனின் வீரத் தளபதியாக இருப்பதை வெறுத்து, அனைத்துல அரசனின் வீரனுகவே தன் எதிர் காலத்தை மாற்றும் உறுதியான கொள்கை அவரை ஆட்கொண்டது.

**இலட்சியப் பாதையிலே .... ....**

ஒருநாள் நள்ளிரவிலே தான் அணிந்திருக்கும் ஆடம்பரமான ஆடைகள் தன் இலட்சியத்துக்கு எதிரிகள் எனக் கருதியதுடன் நில்லாது, அவ்வர்டைகளை கழற்றி வறியவன் ஒருவனுக்கு அவற்றை அன்பளிப்பாகக் கொடுத்து அந்த வறியவனின் கந்தல் உடைகளைத் தான் அணிந்து கொண்டு - தடி ஊன்றி-காலில் பாதரட்சையின்றி நொண்டிய வண்ணம் அந்த விடுதியில் இருந்து பிரியா விடை பெற்று உலகையே வெல்லப் புறப் பட்டார். அதன் அடிப்படைத்தத்துவமாக ஏகாந்தமான மனித சஞ்சாரமற்ற வனம் நோக்கிக் கால்கள் சென்றன. ஆம், ''மன்ரேசா'' மலைக்குகை மகிழ்ச்சியோடு அவரை அழைத்துக் கொண்டது. ஒருநாளல்ல - இரு மாதம் அல்ல, ஒரு வருடம் வரை கடும் செபமும் தபமும் அங்கு அவர் வாழ்வாகியது. தன் வருங்கால இலட்சியத்திற்கு நல்ல தரமான உறுதியான அத்திவாரமதை உள்ளத்திலே எழுப்புகின்றுர் லொயோலா அங்கு.

**அன்பின் அழைப்பிலே .... ....**

முடிபாக யேசுவின் அன்பின் அக்கினி அவர் இதயத்திலே பற்றி எரிகின்றது. அந்த அக்கினியை அயலார் உள்ளத்திலும் ஏற்றி விட விழைந்தார். அதற்குரிய ஒரேவழி தான் துறவியாக இருப்பதுடன் என் பணி முடிவதில்லை. ஒரு குருவாக மாறவேண்டும் என்பது தான். இந்நிலையில் முப்பது வயது பூரணமடைந்த லொயோலா அந்த மன்ரேசாவை விட்டு நீங்கிக் குருமடம் சேர்ந்தார். அங்கு முதலில் படிக்க வேண்டிய மொழி''லத்தீன்'' ஆக இருந்தது. தம் உடன் மாணவரோ வயதில் குறைந்தவர்களாய் இந்தனர். எனினும் மனம் சோரவில்லை - கவலை கொள்ளவில்லை. கல்வியில் கவனம் காட்டினுர் லொயோலா. ✲

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்வு

வெண்ணிலாவின் வண்ண ஜாலத்தால் கடலன்னை பொங்கிப் பெருகி மகிழ்வுற்றுக் கொந்தளித்துக் கொண்டிருந்தாள். பொங்கியெழும் அலைகளின் இடையே சென்று கொண்டிருக்கும் படகுகளின் பரிமளிப்பும், பகட்டாக ஒளியை வீசிக்கொண்டிருக்கும் கலங்கரை விளக்கமும் அந்த மங்கல வெண்ணிலவுப் பொழுதிற்கு புதுச்சோபையை உண்டு பண்ணிக் கொண்டிருந்தன.

இளமையும் குழுமையும் பொருந்திய அந்த இன்பப் பொழுது என்னை சிந்தனையில் ஆழச் செய்தது. ''இறைவா இந்தச் சிறு வயதிலா என்னை இப்படிச் சோதிக்கிறாய்? என்னால் என்ன செய்ய முடியும். நான் என்ன அவ்வளவு பெரியவனா?'' பதினொரு வயது முடிந்து பதினைந்து நாட்கள்கூட ஆகவில்லை. அதற்குள் பெற்றோரை இழந்து தவிக்கும் எனது அன்புத் தங்கையைப் பராமரிக்க வேண்டிய நிலை எனக்கேற்பட்டுள்ளது. என்னையன்றி வேறுயாரையும் அவளுக்குத்தெரியாது. அவள்

## மூதூர் N. C. அருள்வரதன்

அழும்போதெல்லாம் நானும் அவளுடன் சேர்ந்து அழுதுவிடுவேன். என் தங்கையை எவ்வளவு கஷ்டப்பட்டாவது படிக்கவைத்து அவளுக்கு ஒரு நல்ல வாழ்வு தேடிக் கொடுத்து அவள் அடையும் இன்பத்தில் நானும் பங்கு கொள்ள வேண்டும் என்பதே எந்தன் நோக்கமாக இருந்தது. ஏதோ நானும் பாடசாலைக்குச் சென்று படித்துக் கொண்டு எனது தங்கையையும் படிப்பித்துக்கொண்டு வந்தேன். பாடசாலையில் இருக்கும் நேரம் மாத்திரந்தான் எனக்கு ஓய்வாக இருந்தது. மற்றைய நேரங்களில் கூலிவேலைகளுக்குச் சென்று ஏதோ கிடைக்கும் சிறு ஊதியத்தைக் கொண்டு எனது துன்பம் நிறைந்த வாழ்க்கையைக் நடத்தவேண்டியிருந்தது. ''காலமென்னும் நதி என்றும் ஒரே மாதிரியாக இருப்பதில்லைத்தானே''

ஆண்டுகளும் கடந்து செல்லச்செல்ல என் வாழ்வில் சில மாற்றங்களும் ஏற்பட்டுக் கொண்டே வந்தன. நான் பாடசாலையில் நடைபெற்ற எந்தப் பரீட்சையிலும் அசித்தியடைந்ததேயில்லை. இப்போதுகூட அரசாங்கப் பரீட்சையில் சித்தியடைந்ததோடல்லாது அரசாங்க அலுவலகம் ஒன்றில் இலிகிதர் பதவியும் கிடைத்திருக்கின்றது.

எனது அன்புத் தங்கையை இன்பமாக வாழவைக்க மேண்டும் என்ற பேரவா என் இதயத்தில் நிமிடத்திற்கு நிமிடம் ஒலித்துக் கொண்டே இருந்தது. எனது அன்புத் தங்கையின் இன்ப வாழ்வுக்காக நான் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்திருக்கிறேன். ஆனால் அவை பெரும் சுமையாக எனக்குத் தெரியவில்லை. அவளின் பொங்கித் ததும்பும் இன்ப வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாலே நேரம் போவதைக்கூட என்னால் அறிய முடியாமல் போய்விடும். நான் அவளின் திருமணத்தைப்பற்றி அவளிடம் கூறும்போது, அவள் தனது மேனியை நாணிக்கோணி மறுப்புத் தெருவித்துக்கொண்டு ஓடும்போதெல்லாம் என் தங்கையின் அழகைக் கண்டு இரசித்துக்கொண்டிருப்பேன். எனக்கு சிறு தலையிடிகூட வந்தாலும் அவளால் சகிக்க முடியாமல் போய்விடும். நானும் அதேபோன்று என் தங்கைக்கு ஏதும் வந்துவிட்டால் அதை நான் தாங்கிக்கொள்ளவே மாட்டேன். அவளும் ஏதோ நான் பட்ட துன்பத்திற்குப் பலனாகப் பரீட்சையிலும் சித்தியடைந்து விட்டாள். இனி அவளை நல்லதொரு இடத்தில் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்பதே என் ஆசையாக இருந்தது. அதற்கும் என் தங்கை அதிஸ்டசாலியென்றுதான் சொல்ல வேண்டும். என்னுடன் வேலை பார்க்கும் எனது பிரிய நண்பன் என் தங்கையை மணஞ் செய்யச் சம்மதித்துவிட்டான். நல்லவன்; பார்ப்பதற்கு அழகானவன்; மூன்று மொழிகளிலும் திறம்பட வேலையாற்றக்கூடிய தகுதியுடையவன். இப்படிப்பட்ட ஒரு நற்குணசீலனை என் தங்கைக்கு மாப்பிள்ளையாக்குவதில் எனக்குத்தான் எத்தனை பெருமை. ஆனால், நான் இது பற்றி என் தங்கையிடம் கூறியபோது அவள் தனக்கு திருமணமே வேண்டாமென்று ஒரே பிடியாய் சொல்லி விட்டாள். அவள் எனக்கு கூறிய முடிவு என்னை ஒரு கணம் ஸ்தம்பிக்க வைத்துவிட்டது. ''அவள் இவ்வுலக ஆசை

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாழ்வு......

[11ம் பக்கத் தொடர்ச்சி]

களை வெறுத்து இறைவனுக்குத் தொண்டு செய்ய கன்னியாஸ்திரியாகப் போகப்போகிறாளாம்.'' நான் அவள் கூற்றுக்குத் தடை போடவில்லை. நான் யாருக்காக வாழ்ந்தேனோ, அந்த அன்புத்தங்கை தீர்மானித்த இந்த முடிவை யெண்ணி என் மனம் வியந்தது. சடுதியாக வீசிய குளிர்காற்றின் ஜாலத்தால் நான் என் ஆழ்ந்த சிந்தனையில் இருந்து விடுபட்டுக்கொண்டு மெல்ல எழுந்து என் நண்பன் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன்; அவள் முடிவை அவன் அறிய வேண்டும் என்பதற்காக.

(யாவும் கற்பனை)

# ஐயோ! உலகமே!

உலகே! உனது விடை எங்கே?
உன்னில் கிடையாத பதில் இல்லையே! - உன்னை
அறியாமலே ஒன்றும் புரியாமலே - இன்று
வந்தேனே விடை காணவே!

இல்லாத நல்லோனை எதிர்பார்க்கின்றாய் — நீ
இருக்கின்ற நல்லோனை ஏன் மறுக்கின்றாய்
பொல்லாத மனத்தோனைப் புறம்பாக்கின்றாய் — அவன்
பொன்னாக உன் அன்பை ஏன் தடுக்கின்றாய்? [உலகே]

உயர்ந்தோனை உலகெல்லாம் நீ தேடுவாய் — உன்
அயலானில் அக்குணத்தை நீ மூடுவாய்
இயல்பான பவமனதை எடுத்தோதுவாய் - என்று
எதிர்பார்க்கும் உலகத்தை நீ காணுவாய்? [உலகே]

பிறர்தானே மனத்தாலே உரமாயினால் - நீ
பிடிவாதம் அது என்று பேர் சூட்டுவாய்
பலியாகும் உன் மனமும் அதுவாகினால் - மனத்
திடன் என்று அதன் பெயரை நீ மாற்றுவாய் [உலகே]

பழிவாங்க மறுத்தன்பன் பரிவாகினால் - நீ
படுகோழை அவன் என்று பதில் கூறுவாய்
வழி தேடி வளமாகப் பழி காட்டினால் - அவன்
படுபாவிப் பரதேசிப் பயலாகுவான். [உலகே]

உலகே! உன் விடையெங்கே? - உரமில்லையா?
வாழ்வே! உன் வாய் எங்கே? மொழியில்லையா?
உணர்வே உன் துடிப்பெங்கே? உயிரில்லையா?
ஏனோ இந்நிலையின்று விடையில்லையா? [உலகே]

சிஸ். எம். றெஜினல்டா, ஏ. சி.
கல்முனை.

## கிறிஸ்தவ வாழ்வு......

[7ம் பக்கத் தொடர்ச்சி]

வுளால் படைக்கப்பட்டான்; பாவத்தால் தன் உயர் வாழ்வை இழந்தான்; கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டான். அப்படி இரட்சிக்கப் பட்டவன் சுதந்திரவாளியாய் இருப்பதால் அவன் இந்த இரட்சிப்பில் தன் அலுவலைச் செய்யவேண்டும். ''கடவுள் மனிதனுடைய அனுமதி இன்றி அவனைப் படைத்தார். ஆனால் அவனுடைய விருப்பமின்றி அவனை இரட்சிக்கமாட்டார்'' என்கிறார், புனித அகுஸ்தினார். அப்படியென்றால் மனிதன் தன் சுய அறிவைப் பயன்படுத்தி திருச்சபையிடம் திருவருட் சாதனங்களையும் அருட்குறிகளையும் பெறவேண்டும். அவைகள் அவன் மேல் திணிக்கப்படவோ, பலாத்காரமாய் குவிக்கப்படவோ கூடாது. இக்கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது கிறிஸ்துவின் ''அன்புக் கட்டளையின்'' ஆழத்தை உணரக்கூடியதாய் இருக்கிறது. மனிதன் அன்பினால் தூண்டப்பெற்று இறைவனை அண்டிப் போகவேண்டுமே அன்றி, பயத்தினாலோ, தன் சொந்த ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காகவோ கடவுளை நாடிப் போதல் முறையன்று. இப்படியான எண்ணத்துடன் மனிதன் கடவுளை அண்டிப் போகும்பொழுது, கடவுள் அவனை அவனுடைய மனிதத் தன்மையில் நின்றும் உயர்த்தித் தம் மகிமையில் பங்கடையச் செய்வார்; அப்பொழுது மனிதன் பரம திருத்துவத்தின் அந்தரங்க வாழ்க்கையில் பங்கடைவான்.

இந்த உண்மையை மனதில் கொண்டு வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. இப்படியான வாழ்க்கையில் கிறிஸ்து முதலிடம் வகிக்கிறார் என்பதில் சிறிதேனும் சந்தேகம் இல்லை அல்லவா, மலர்விழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

**பாடம் 9: கடவுள் மனிதரை உண்டாக்கிறார்.**

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கம் எனும் நூலின் 18ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. கடவுள் மனிதனை மண்ணினால் உருவாக்கினார், என்று சொல்லும் பொழுது கடவுள் மனிதனுடைய உடலை உலக பண்டங்களிலிருந்து உண்டாக்கினார் என்பது கருத்து.
2. அவனுள் ஜீவ ஆவியை ஊதி அவன் உடல் உயிர் பெறச் செய்தார்.
3. மனித ஆன்மாவின் சக்திகள்: பகுத்தறிவு, சுயமனம்,
4. ஆன்மா ஒரு ஆவிப்பொருளானதால் அது சாக முடியாது.
5. அளவிடற்கரியவரும், நிறைந்தவரும், தூய ஆவியுமான கடவுளுக்கு மனிதன் தன் ஆன்மாவில் ஒத்தவனாய் இருக்கிறான்.
6. அருள் உயிர் என்னும் நன் கொடையின் பயனால், ஆதித்தாய் தகப்பன் கடவுளின் பிள்ளைகளானதுமட்டு அன்றி அவருக்கு ஒத்தவர்கள் ஆனார்கள்.
7. சிறந்த அறிவு, வலிமை, நன்மையை நாடும் சக்தி, பொருள் நாட்டமின்மை, சந்தோஷம், களைப்பின்மை, துன்பமின்மை வியாதின்மை, சாகாமை, என்பன.
8. கடவுள் ஒரு கட்டளை கொடுத்ததின் மூலம் அவர்களைச் சோதித்தார்.
9. அவர்கள் அதற்குக் கீழ்ப்படிந்திருந்தால், அருள் உயிரையும் சிங்காரத் தோப்பின் பாக்கியமான நன்கொடைகளையும் தங்களுக்கும், தங்கள் வழித்தோன்றல்களுக்கும் நிலையாக வைத்திருந்திருப்பார்கள்.
10. அச் சோதனையில் தவறினால் அந்த அருள் உயிரையும், நன்கொடைகளையும் தங்களுக்கும், தங்கள் வழித்தோன்றல்களுக்கும் என்றும் இழந்து விடுவார்கள்.

**பயிற்சிகள்:** பொருத்தி எழுதுக

| | |
|---|---|
| 1. கடவுள் மனிதனைத் தம்முடைய | 1. ஒரு ஞானப் பொருள். |
| 2. கடவுள் மனிதனின் உடலை | 2. தேவ இஸ்டப்பிரசாதமும் ஒன்றே. |
| 3. கடவுள் மனிதனின் ஆன்மாவை | 3. உலகப் பண்டங்களிலிருந்து உண்டாக்கினார். |
| 4. மனிதனின் ஆன்மா | 4. ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கினார். |
| 5. அருள் உயிரும் | 5. சாயலாகப் படைத்தார். |

---

**பாடம் 10: நம் முதல் பெற்றோர் பாவம் புரிந்தனர்.**

இப்பாடம் தி. ம். வி. என்னும் நூலின் 19ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. முழுச் சுயாதீனத்தோடு தாம் கடவுளின் கட்டளையை மீறுவதாக அறிந்திருந்தும், அதை மீறினார்கள்; அத்துடன் கடவுளைப்போல் ஆகவேணும் என்று பெரும் எண்ணமும் கொண்டதினால்.
2. நம் முதல் பெற்றோர் செய்த முதல் பாவத்தால் கடவுளுடைய பிள்ளைகளாய் இருக்கும் நிலையைத் தவறிவிட்

(14ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

டனர். அருள் உயிரை இழந்தனர்; மோட்சத்தில் நுழைய தகுதியற்றவர் களாயினர்.

3. சிங்காரத்தோப்பில் அவர்கள் அனுபவித்த ''பாக்கியமான நிலையின்'' சிறந்த கொடைகளையும் இழந்தனர்.

.4 வரவிருக்கும் உலக மீட்பரின் பெயரால் அவர்களுக்கு அருள் ஈந்து அவர்கள் பாவத்தை உணரச்செய்து, மன்னிப்பையும் அளித்தார்.

**பயிற்சிகள்:**

''ஆம'' அல்லது ''இல்லை'' எனப்பதில் எழுதுக.

1. முதல் பெற்றோர்கள் சோதனை வேளை வந்த போது கடவுளைப் பின்பற்றினர்.
2. ஆதாமும் ஏவாளும் தாம் கடவுள் கட்டளையை மீறுவதாக நன்கு அறியவில்லை.
3. ஆதாம் ஏவாள் செய்த பாவத்தை சென்ம பாவம் என்று சொல்கின்றோம்.
4. கடவுள் பாவிகள் மேல் கருணை காட்டுகிறார்.
5. முதல் பெற்றோர் செய்த பாவத்தின் விளைவால் பசாசு மனுக்குலத்தின்மேல் ஆதிக்கம் பெற்றது.

**பாடம் 11: கடவுள் உலக மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார்.**

இப்பாடம் க. தி. வி. என்னும் நூலின் 21ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. நம் முதல் பெற்றோர் பாவத்தில் விழுந்த பின் பசாசு ஒருநாள் தோற்கடிக்கப்படும்; மனித சந்ததியிலிருந்து ஒரு மீட்பர் பிறப்பார், அவர் மனுக்குலத்தைப் பாவத்தினின்றும், அதன் தீய விளைவுகளினின்றும் காப்பாற்றுவார், என்று கடவுள் அவர்களுக்கு வாக்களித்தார்.
2. வரப்போகிற மீட்பரைப்பற்றி அதிகமான விபரங்களைக் கடவுள் பிதாப்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் மூலமாக முன் அறிவித்தார்.
3. வரவிருக்கும் உலக மீட்பர் ஒரு கன்னித் தாயிடம் இருந்து பெத்தலேகம் என்னும் ஊரில் பிறப்பார். மாபெரும் தீர்க்கதரிசியாக விளங்குவார். அரும் பெரும் செயல்களைச் செய்து காட்டுவார். ஒரு குருவாக இருந்து தன்னைத் தானே பலியாக மக்களுக்காக ஒப்புக் கொடுத்து, பின் அரசராகவும் நீதிபதியாகவும், உயர்த்தப்படுவார்.
4. மெசியா என்பதன் பொருள் அபிஷேகம் செய்யப்பட்டவர்.
5. வரப்போகும் உலக மீட்பர் குருவாகவும் அரசராகவும் இருந்ததால், மெசியா என அழைக்கப்பட்டார்.
6. மீட்பரின் முன்னோடியாக இருந்து அவர் பாதைகளைச் செம்மைப்படுத்தி, மக்களை அவர் வருகைக்கு ஆயத்தம் செய்வதே.
7. கடவுளின் பெரும்பான்மையான உறுதி மொழிகள் கிறிஸ்துநாதரில் நிறைவேறி விட்டன. மற்ற அநேக உறுதி மொழிகள் திருச்சபையில் நிறைவேறிக் கொண்டு வருகின்றன.

**பயிற்சிகள்:**

மாறிக் கிடக்கும் சொற்களைச் சரியாக ஒழுங்கு படுத்தி வசனமாக அமைக்குக:-

1. நாட்கள் வரும்—''இதோ—இஸ்ருயேல்—புதிய வீட்டோடும் — யூதாவின் — அப்பொழுது — இஸ்ருயேலின் வீட்டோடும் — புதிய — யூதாவின் வீட்டோடும் — உடன்படிக்கை — என்கிறார் — செய்வோம் — ஆண்டவர்.
2. பூமியின் மக்கள் — எல்லையில் உள்ள — ஆண்டவரை—எல்லோரும் — நினைத்து — வருவார்கள் — திரும்பி — அவரிடம்.
3. துளிர் — யெஸ்சே — ஒரு — கிளம்பும் — தண்டினின்று — அதன் — மலர் — வேரினின்று — ஒரு — மலரும்.
4. இதோ — கர்ப்பமாகி — கன்னியானவள் — மகனைப் — ஒரு — பெறுவாள்.
5. உனக்கும் — வித்துக்கும் — பெண்ணுக்கும் — உடன் — வித்துக்கும் — அவளுடைய — உண்டாக்குவோம் — பகையை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

### (ஊ) உவமைகள் மூலம் போதித்தல்.

**பணக்காரனும் ஏழையும்**
16, 19 – 31.

யூதமதத் தலைவர்கள் என்று, தங்களைக் கூறிக்கொள்ளும் ஒரு கூட்டத்தவர்களுக்கெதிராக, இயேசு விடும் இன்னுமொரு பாணம் இது. சதுசேயர் என்பவர்கள் யூத குழுவில் ஒரு பகுதியினர் இவர்கள் மிகவும் பணக்காரர்களாக இருந்தார்கள். மறு வாழ்வு ஒன்று உண்டு என்பதை இவர்கள் நம்பவில்லை. இறந்தவர்கள் உயிர்த்து எழும்புவர் என்பதையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த உவமை மூலம் தன் சொந்த உத்தானத்தைப் பற்றியும், இவர்களுக்கு, இயேசு கூறுமல் எடுத்துக் கூறுகின்ருர்.

இருவரின் வாழ்க்கை இந்த உவமையில் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றது. ஒருவன்: பணக்காரன். மற்றவன்: இலாசர் என்னும் ஒரு ஏழை. பணக்காரன் எப்பொழுதும் துன்பம் அனுபவிப்பான் என்றும், ஏழை எப்பொழுதும் இன்பம் அனுபவிப்பான் என்றும் கூறுவதற்கில்லை. மனிதனுக்கு அவசியமான உணவு, உடை, வீடு என்னும் தேவைகள் பணக்காரனுக்கு ஏராளமாக உண்டு. அவன் இடாம்பீக வாழ்வு வாழ்கின்ருன். மனித அத்தியாவசிய தேவைகள் எதுவுமின்றி, வருத்தத்துடன், கவனிப்பார் அற்று, தன் காயத்தை நக்கும் நாயைத்தானும் துரத்த சக்தியற்று, வாசல் அருகில் கிடக்கும் இலாசர் என்னும் ஏழை. உலகின் கண், இருவருக்குமிடையில், மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்கிறது.

இரண்டு பேரும் ஒருநாள் இறக்கிருர்கள்' உடனே மாபெரும் மாற்றம் ஏற்படுகின்றது' மலை மடுவாகவும், மடு மலையாகவும் ஞான உலகில் மாறுகின்றது, பணக்காரன், ஒரு கொடியவனுகவோ, அல்லது இலாசரைத் துன்பப்படுத்தினவனுகவோ, உவமையில் எமக்கு எடுத்துக் காட்டப்படவில்லை. இவன் இலாசரைக் கவனிக்காமல், தன்பார்வையை அவன் மீது செலுத்தாமல், தன் இன்ப சுகத்தையே மையமாகக் கொண்டு நடந்திருக்கிருன். ஏழைகளின் துன்பத்தைத் துடைப்பதற்குத் தன் பணத்தைப் பயன்படுத்தாமல், இவ்விதம் துர்பிரயோகம் செய்திருக்கிருன்.

இந்த உவமையின் முதல் பகுதி, அந்நேரத்தில் எகிப்து தேசத்தில் வழங்கி வந்த ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மரணத்தின்பின், ஏழைக்கு இன்பமான இடமும், பணக்காரனுக்கு துன்பமான இடமும் கிடைக்கும் என்பது. எனவே எமது மறுஉலக சீவியம் எப்படியிருக்கும் என்ற விபரத்தையோ அல்லது மோட்சம் நரகம் எப்படியிருக்கும் என்ற உண்மையையோ, இவ் உவமையின் மூலம் நாம் அறிய முடியாது. ஆனுல் மறு உலக சீவியம் என்று ஒன்று உண்டு, இவ்வுலகில் பரிசுத்த சீவியம் சீவிக்கிறவர்கள், மறு உலகில், நிட்சயமாக அதன் சம்பாவனையை அடைவார்கள் என்பதை இவ் உவமை நன்கு எடுத்துரைக்கின்றது

உவமைகளில் கூறப்படும் சமய – சன்மார்க்க உண்மைகளை (Dogmatic and Moral Lessons) எடுத்துரைக்க, சுவிசேசகர் பயன்படுத்தும் மாதிரிகளை நாம் நன்கு பகுத்து அறிய வேண்டும், இருவரும் ஒரே இடத்தில் இருக்காவிடில், ஆபிரகாமுக்கும் பணக்காரனுக்கும் எப்படிச் சம்பாஷணை நடந்திருக்க முடியும்? உடல் ஆத்துமம் ஒன்று சேரமுன்பு, எப்படி மடியில் இருக்க முடியும்? பார்க்க முடியும்? பேசமுடியும்? நரகத்தில் நெருப்பு இருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு இடமில்லை.

மறுவாழ்வில், இருவருக்கும் கொடுக்கப்பட்ட நியாயத் தீர்ப்பு மாறுபடாது. துன்பத்தைக் கூட்டவோ குறைக்கவோ, முடியாது. ஆபிரகாம் போன்ற புனிதர்களினுலும் ஒன்றும் செய்யமுடியாது. இந்த உவமை எங்களுக்குக் கூறும் முதலாவது உண்மை இதுவே.

(16ம் பக்கம் பார்க்கவும்)

**(அருட்திரு. R. S. லோப்பு அடிகள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்............

*(15ம் பக்கத் தொடர்ச்சி)*

அங்கே உத்தரிக்கிறவர்கள், இங்கே உலகில் நடப்பவற்றை அறிகிறார்கள் என்றோ, அல்லது உலகில் வாழ்பவர்களின் நன்மையை இவர்கள் கருதுகிறார்கள் என்றோ நாம் எடுக்கக் கூடாது. இவ்வித சூழ்நிலையை ஆசிரியர், கதையில் உருவாக்கினால் தான், ஆதிபிதா ஆபிரகாம் பதிலை நாம் அறிய முடியும். ஆபிரகாம் பதில் எமக்கு இரண்டாவது சன்மார்க்க உண்மையை எடுத்துக் காட்டுகின்றது. இறைவெளிப்பாடு (Revelation) மனிதரை (யூதமக்களை) வழி நடத்தப் போதுமானது. வேதாகமத்தை விசுவசியாதவர்கள், மரித்தவர்கள் உயிர்த்தாலும் விசுவசிக்கமாட்டார்கள். வேதாகமத்தில் வரும் சம்பவங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. கிறீஸ்துவை விசுவசிப்பதற்கு யூதர்கள் ஒரு புதுமையை வேண்டுகின்றனர். பெத்தானியாவில், இலாசறு என்பவரை உயிர்ப்பித்தார். பின்பு தன் உத்தானத்தினால் நிரூபித்தார். இவற்றைக் கண்ணுற்றும், யூதர்களில் சிலர், கிறிஸ்துவை விசுவசிக்கவில்லை.

× + + + + + + + + + + + + + + + + ×

### பரிசேயனும் ஆயக்காரனும்

*18, 9 – 14.*

× + + + + + + + + + + + + + + + + ×

கடவுளை முந்திய உவமையில், ஏழைகளின் தேவன், பிழை செய்பவர்களின் அன்பன் என்று கூறிய லூக்காஸ், இந்த உவமையில் அவரை, ஆயக்காரர், பாவிகள், தள்ளி வைக்கப்பட்டவர்களின் கடவுள் என்று வர்ணிக்கின்றார். 'இரட்சணியம் அனைவருக்கும் உண்டு' என்ற கருத்தைத் தழுவி வரைவது, லூக்காஸ் என்பவரின் விசேச குண இயல்பு.

இருவர் செபம் செய்யச் சென்றார்கள். ஒருவன் பரிசேயன். மற்றவன் ஆயக்காரன். நெற்றியில், இடக்கையில், யூத விசுவாச உச்சாரணத்தைத் தாங்கிக் கொண்டு, மோசேஸ் சட்டத்தை மிகவும் நுணுக்கமாக அனுசரிப்பதை, மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் வெளி அடையாளத்தை அணிந்து கொண்டு, வீறு நடை போட்டு ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் அறிகுறியைக் காட்டிக் கொண்டு, வந்தனம் கூறுபவர்களுக்கு தலையை மட்டும் அசைத்த வண்ணம் சென்று கொண்டிருக்கிறான் ஒருவன். இவன்தான் பரிசேயன்.

அவசரத்தில் வேகமாக நடந்து கொண்டு தன்னை மற்றவர்கள் கண்டுவிடுவார்களோ என்ற பயத்தில், சுவரில் மறைந்து கொண்டு, சாதாரண வழிப்போக்கரைப் போன்று விசேச வெளி அடையாளம் எதுவுமின்றி, தங்களை நீதிமான்கள் என்று கருதும் சிலரின் கெட்ட பார்வைக்கு இலக்காகிக் கொண்டு, சென்று கொண்டிருக்கிறான் இன்னொருவன். இவன்தான் ஆயக்காரன்.

இரண்டு பேரும் தேவாலயத்தை அடைந்தனர். பரிசேயன் கம்பீரத்துடன் பீடத்தண்டை சென்றான். ஆனால் ஆயக்காரன் தேவாலய வாசலில் தன்னை நிறுத்திக் கொண்டான். இருவரும் செபம் செய்ய ஆரம்பித்தனர். பரிசேயன் தன் விசுவாசம் நம்பிக்கையை கடவுளின் மேல் போடாமல், சட்டத்தின் மேல் (Standards) வைத்தான். சட்டத்தின் படி நடக்காதவர்களையும், நடக்கத் தவறியவர்களையும் குறைவாக மதித்தான். தான் கடவுளுக்கு தேவைப்படுகிறான் என்று அவன் எண்ணினான். ஆயக்காரனோ, தன் முழு விசுவாசம் நம்பிக்கையை கடவுள் மீது வைத்தான். தனக்குக் கடவுள் தேவைப்பட்டதை உணர்ந்தான். அகங்காரத்தின் சின்னமான பரிசேயனுடைய செபத்தைக் கடவுள் ஏற்றுக் கொள்ளவில்லை. தாழ்ச்சியின் மாதிரியான ஆயக்காரனின் செபத்தைக் கடவுள் ஏற்றுக் கொண்டார். தன்னை 'நீதிமான்' என்று கூறிக்கொள்ளும் பரிசேயனை விட, கடவுள் முன்னிலையில் ஆயக்காரன் நீதிமானாக வீடு திரும்பினான்.

''தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் பெறுவான்'' என்ற உண்மையை ஆரம்பத்தில் படைப்பு நடைபெற்ற போதும் மறை உடல் பிறந்த பொழுதும், நடந்த சம்பவம் நன்கு விளக்குகின்றது. சம்மனசுகளின் தலைவன் அகங்காரத்தினால் உன்னதத்திலிருந்து பாதாள அடியில் விழுந்ததும், மரியம்மாள் என்ற மாது தாழ்ச்சி என்னும் புண்ணியத்தினால் கடவுளின் தாயாகி, உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டதையும் உலகம் நன்கு அறியும்.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1–7–71ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media